UFFICIO STAMPA E COMUNICAZIONI
COTTOLENGO

பியோரினா செக்கின் அவர்கள் ஏப்ரல் மூன்றாம் நாள் 1877 -ஆம் ஆண்டு சிட்டாடிலோன் என்ற இடத்தில் பிறந்தார். இவர் தனது 19 -ஆம் வயதில் கொத்தலெங்கோ சபையில் சேர்ந்தார். பிறகு அக்டோபர் 3 -ஆம் நாள் 1897 ஆம் ஆண்டு தனது கன்னியர் மட பயிற்சியை மேற்கொன்டார்.

1899 ஆம் ஆண்டு அவர் சமயப் பணித்துறையை முடித்தார். அவர் தமது சேவையான சமையல் பிரிவினை தேர்ந்தெடுத்துக்கொண்டார்.ஜியோவினா கல்லூரியிலும் மற்றும் சிறுவர் இல்லத்திலும் தமது சமயப்பணியை மேற்கொண்டார்.தனது வார்த்தைப் பாட்டில் அவர் ஏற்கொண்டது “TO LOVE GOD AND THE SOULS” அதாவது இறைவனை நேசிப்பதுபோல் ஆன்மாவையும் அன்பு செய்வாயாக.

1905 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் நாள் ஆப்பிரிக்கா சென்றார். அங்கு அவரின் முதல் சந்திப்பு ,முதல் சமயப்பணி ஆரம்பிக்கப்படுகிறது. அவைகள் (LIMURU) லிமுரு,துது,இசியாகாகி,முகோரி,வாம்போகோ இறுதியாக திக்கான்யா-மெரு. அவர் நான் ஒரு சிறந்த தெய்வ பக்தியுள்ளவர் என்பதனை தனது சமயப் பணியின் மூலம் உணர்த்தினார். அவர் தனது வாழ்வில் அடிக்கடி கூறியது ஒரு நல்ல இறப்பு என்பது அனைத்தையும் பெறும் என்பதே இவரின் பழக்கமான ஒன்று.

தான் செய்யும் ஒவ்வொரு பணியும் விண்ணக தந்தைக்கே என்பார்.

அவர் தனது சமயப் பணியினை இசியாகாகித் இல்லத்தில் அதுவும் அரைகுறையாக கட்டப்பட்ட சிறு குடிசையில் தங்கி அங்கு தோட்ட பணியினையும் செய்து தங்களுக்கு தேவையான அனைத்து காய்கறிகளையும் விளைவித்து தனது இல்லத்தில் பகிர்ந்து உண்டு வாழ்ந்தார்.அங்குள்ள அனைவரையும் தனது தார்மீக அன்பால் வழிநடத்தினார்.

அதன் பின் அவரின் சிரிய ஒழுக்கமான சமய வாழ்வு அடுத்த இடத்திற்கு இடம் பெயர்ந்தார். முகோரி பின்பு வாம்போகோ இரு அருட்ச கோதரியுடன் மருத்துவ பணியை ஆரம்பித்தார். 1915 முதல் 1918 வரை அது ஒரு நாடக நிகழ்வு போல் அமைந்தது.அவர் லேசான மனோபலம் கொண்டவர் ஆவார்.புனித கொத்தலெங்கோ அடிகடிசொல்லும் இறைவார்த்தை"கிறிஸ்துவின் அன்பு என்னைப் பற்றி எறிய செய்கிறது".என்ற வார்த்தையின்படி வாழ்ந்தார்.

இவர் இறைவனுக்காகவும் ஏழை மற்றும் மிகவும் பின் தங்கிய மக்களுக்கும் அயராது பணியும் கருணை உள்ளம் கொண்ட தொண்டும் புரிந்தார். நற்செய்தியின் தூதுவனாக இறைவனும் நமது பாதுகாவலரும் இயேசுகிறிஸ்து ஒருவரே போல் இதில் நான் ஒரு கருவியாக ஆவேன் என்பார்.

அவரின் இறுதி இறைப்பணி ‘திக்கானியா’ என்ற இடத்தில் அதுவும் துன்பமான நாட்களாகும். எத்தனையோ புனிதருகள், கதாநாயகர்கள்,தியாகிகள் அனைவரும் கடைசியில் நினைப்பதுவும் தோன்றுவதுவும் இத்திருத்தலத்தில் தான்.

Suor Lucia Mossucca - Stefano Di Lullo

www.cottolengo.org
Via Cottolengo, 12 -10152 Torino, cell. +39 345 6216561
ufficiostampacottolengo@cottolengo.org

இவரின் கடைசி பயணமானது ஆப்ரிக்கா 1925 இல் அக்டோபர் 25 ஆம் நாள் நிறைவுற்றது. அவர் 1925 இல் நவம்பர் 13 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.இவரின் இறுதி சடங்கானது அங்குள்ள சிவப்பு கடல் பகுதியில் அடக்கப்பட்டது.

இன்று நம்முடன் ஒரு முன்மாதிரியான இறைபணியாளராகவும் தூய்மையானவராகவும் விளங்குவதுடன் மட்டுமல்லாமல் இறைவனுக்கும் ஏற்ற பிள்ளையாக என்றும் வாழ்ந்தார். அருட்சகோதரி மரிய கரோலா அவர்களை தமது திருச்சபையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிசு 2020 நவம்பர் 23 ஆம் நாள் இவரை மதிப்பிற்குரியவர் என்று அழைத்துள்ளனர்.